## முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

## O.S.No. 163/2020

2026 ஆம் வருடம் ஜனவரி மாதம் 30 ம் தேதியன்று **PW.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெகநாதன் | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் வாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக 8.9.2017 பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்த அசல் புரோ நோட் **வாசாஆ 1 (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** 4.10.2017 பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்த அசல் புரோ நோட் **வாசாஆ 2 (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** 12.3.2020 நான் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் **வாசாஆ 3.** பிரதிவாதிகள் பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வாசாஆ 4.** பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு **வாசாஆ 5**. 7.7.2020 நான் பிரதிவாதிக்கு அனுப்பிய rejoinder notice **வாசாஆ 6**. பிரதிவாதி எனக்கு

கொடுத்த அவருடைய மகனின் திருமண வரவேற்பு விழா அழைப்பிதழ் **வாசாஆ 7.** என்னுடைய ICICI வங்கியின் என்னுடைய Statement of accounts 1.1.2017 – 31.12.2017 வரையிலானது **வாசாஆ 8 (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன். வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 ல் ஸ்டாம்பின் மீது மேலும் கீழும் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது.